Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

தினத்தளம்

நடுநிலை நாளிதழ்

PRGI NO: TNBIL/25/A3556 ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 • இதழ் Issue : 115 • புதன்கிழமை Wednesday • 25.02.2026 • பக்கங்கள் Pages:4 • ₹ 6 • ஈரோடு Erode

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

# தமிழர் மறுவாழ்வு முகாமில் புதிதாக கட்டப்பட்ட 90 வீடுகள்

## கன்னியாகுமரி மாவட்டத்தில் முதலமைச்சர் ஸ்டாலின் திறந்து வைத்தார்





கன்னியாகுமரி:

கன்னியாகுமரி மாவட்டம், பெருமாள்புரத்தில் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் ரூ.7.85 கோடி செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள 90 வீடுகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் முகாம்வாழ் தமிழர்களால் திறந்து வைக்கப்பட்டது

கன்னியாகுமரி மாவட்டத்தில், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்கள் அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் பெருமாள்புரத்திலும், பழவிளையிலும் செயல்பட்டு வருகின்றது. அதேபோன்று விளவங்கோடு வட்டத்தில் கோழிவிளை மற்றும் ஞாரான்விளையிலும் செயல்பட்டு வருகிறது.

மேற்காணும் முகாம்களில் சுமார் 1200 இலங்கை தமிழ் மக்கள் வசித்து வருகின்றனர். மேலும், அவர்களின் வாழ்க்கை தரம் மேம்பட தமிழ்நாடு அரசு மாதந்தோறும் பணக்கொடை, இலவச அரிசி மற்றும் ரேஷன் பொருட்கள், இலவச மின்சாரம், ஆண்டுக்கொருமுறை துணிகள், பாத்திரங்கள் ஆகியவற்றை வழங்குகிறது. அத்துடன், முகாம் வாழ் மக்களுக்கு அவர்களின் திறமைக்கேற்ப தையல் பயிற்சி, ஓவியப் பயிற்சி போன்ற திறன்மிகு சுயதொழில் மூலம் வருமானம் ஈட்டும் வகையில் கட்டணமில்லாமல் பயிற்சிகளை வழங்கி அவற்றில் சிறந்தவர்களுக்கு தொழில் தொடங்குவதற்கு மானியத்துடன் கடனுதவிகளும் வழங்கி வருகின்றது.

கன்னியாகுமரி மாவட்டம், பெருமாள்புரத்தில் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் 6 கோடியே 77 இலட்சம் ரூபாய் செலவில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் புதிதாக கட்டப்பட்ட 100 வீடுகள் கடந்த 17.2.2025 அன்று திறந்து வைக்கப்பட்டது.

மேலும்,பழவிளையில் 4 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் புதிதாக கட்டப்பட்ட 72 வீடுகள் ஏற்கெனவே திறந்து வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.* இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் புதிதாக கட்டப்பட்டுள்ள 90 வீடுகள் திறப்பு

கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறவுள்ள அரசு விழாவில் கலந்து கொள்ள வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்ட போது. நாளை (25.2.2026) நடைபெறவுள்ள அரசு விழாவில் திறக்கப்படவிருந்த பெருமாள்புரம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் புதிதாக கட்டப்பட்டுள்ள 90 குடியிருப்புகளை முதலமைச்சர் இன்று நேரில் சென்று முகாம்வாழ் தமிழர்களை திறந்து வைக்ககேட்டுக்கொண்டதன் அடிப்படையில், தமிழ்நாடு முதலமைச்சர் முன்னிலையில் அக்குடியிருப்புகள் முகாம் வாழ் தமிழர்களால் திறந்து வைக்கப்பட்டது. முதலமைச்சர் அவர்கள்,அவ்வீடுகளை பார்வையிட்டு, முகாம்வாழ் தமிழர்களுடன் கலந்துரையாடி,அவர்களுக்கு செய்யப்பட்டுள்ள வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.

அப்போது, முதலமைச்சர் அவர்களிடம், முகாம் வாழ் தமிழர்கள் நாளை திறக்கப்பட விருந்த குடியிருப்புகளை, இன்றே திறந்து வைத்திருப்பது தங்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தையும், மகிழ்ச்சியையும் அளிக்கிறது என்றும், புதிதாக கட்டப்பட்டுள்ள வீடுகள் தரமானதாக உள்ளதாகவும், தங்களுக்கு முதலமைச்சர் அவர்கள் வழங்கி வரும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் அனைவருக்கும் கிடைத்துவருவதாகவும் கூறி, அதற்கு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்ட னர்.

மேலும், தங்களுக்கு நியாயவிலைக் கடை மற்றும் சமுதாய நலக் கூடம் அமைத்துத் தர வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அக்கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றித்தர அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

40 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாட்டில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்குதல், நீண்ட கால விசா வழங்குதல் உள்ளிட்ட நிலையான மற்றும் மனிதாபிமான அடிப்படையிலான நிரந்தர தீர்வு காண வேண்டும் என்று இந்திய பிரதமர் அவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் 15.2.2026 அன்று கடிதம் எழுதியதற்கும்,தங்கள் மீது அக்கறை கொண்டு தொடர்ந்து முயற்சிகள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் மேற்கொண்டுவருவதற்கும் தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு, பால்வளத் துறை அமைச்சர் த. மனோதங்கராஜ், தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தின் தலைவர் சுரேஷ் ராஜன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ்.ஆஸ்டின், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர். அழகுமீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்

# ‘கேரளம்’ ஆகிறது கேரளா: பெயர் மாற்றத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்



புதுடெல்லி: கேரளாவின் பெயரை கேரளம் என மாற்ற மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

கேரளாவின்பெயரை கேரளம் என மாற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுக்கக்கோரி கேரள சட்டப்பேரவையில் கடந்த 2024, ஜூன் 24 அன்று ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய முதல்வர் பினராயி விஜயன், "இந்த மாநிலம் மலையாளத்தில் கேரளம் என்றே அழைக்கப்படுகிறது. மலையாளம் பேசும் மக்களுக்காக ஒன்றுபட்ட கேரளத்தை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கை சுதந்திரப் போராட்ட காலத்தில் இருந்தே வலுவாக எழுந்துள்ளது. ஆனால், அரசியலமைப்பின் முதல் அட்டவணையில் மாநிலத்தின் பெயர் கேரளா என்றே எழுதப்பட்டது. எனவே, அரசியலமைப்பின் 3வது பிரிவின் கீழ் கேரளம் என்று திருத்தம் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், அரசியலமைப்பின் 8வது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து மொழிகளிலும் கேரளா என்று உள்ளதை கேரளம் என மாற்றவும் மத்திய அரசை இந்த சட்டமன்றம் கேட்டுக்கொள்கிறது" என வலியுறுத்தினார்.

இந்த தீர்மானத்தின் மீது மத்திய அமைச்சரவை இன்று ஆலோசனை மேற்கொண்டது. சமீபத்தில் திறக்கப்பட்ட புதிய பிரதமர் அலுவலக கட்டிடமான சேவா தீர்த்தத்தில் முதல் முறையாக மத்திய அமைச்சரவைக் கூடி இது குறித்து ஆலோசித்தது. முடிவில், மாநிலத்தின் பெயரை கேரளா என்பதில் இருந்து கேரளம் என மாற்றமத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

மத்திய அமைச்சரவையின் ஒப்புதலை அடுத்து, கேரளா (பெயர் மாற்றம்) மசோதா 2026-ஐ, குடியரசு தலைவர், கேரள சட்டப்பேரவையின் ஒப்புதலுக்கு அனுப்பி வைப்பார். கேரள மாநில சட்டப்பேரவையின் ஒப்புதலை அடுத்து, பெயர் மாற்ற மசோதா நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும். மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதை அடுத்து, அது குடியரசு தலைவரின் ஒப்புதலுக்காகஅனுப்பிவைக்கப்படும். குடியரசுத் தலைவரின் ஒப்புதலை அடுத்து பெயர் மாற்றம் நடைமுறைக்கு வரும்.

கேரளாவில் விரைவில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், மாநில பெயர் மாற்றம் முக்கிய நிகழ்வாகப் பார்க்கப்படுகிறது.

கடந்த 2023, ஆகஸ்ட்டில் இதேபோன்ற ஒரு தீர்மானம் கேரள சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. அந்த தீர்மானத்தை ஆராய்ந்த மத்திய உள்துறை அமைச்சகம் அதில் சில தொழில்நுட்ப மாற்றங்களை பரிந்துரைத்தது. அதன் காரணமாக,2024-ல் கேரள சட்டப்பேரவையில் புதிதாக தீர்மானம் நிறைவேற்ற பட்டது.

# ‘ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ.10,000 கருணைத் தொகை’

## அதிமுக 3ம் கட்ட தேர்தல் வாக்குறுதியை அறிவித்தார் எடப்பாடி பழனிசாமி



நிதித்துறை நிபுணர்கள் மூலமாக வரியை உயர்த்தி வருமானத்தை பெருக்கி வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக அலுவலகத்தில் செய்தியாளர்களை சந்தித்த எடப்பாடி பழனிசாமி, மூன்றாம் கட்ட தேர்தல் வாக்குறுதிகளை அளித்தார்.

அந்த வாக்குறுதிகள் குறித்து அதிமுக வெளியிட்ட செய்திக்குறிப்பு விவரம் வருமாறு:

1. ஸ்டாலின் தலைமையிலான நிர்வாகத் திறனற்ற விடியா திமுக ஆட்சியில்,கடந்த 5 ஆண்டுகளில் அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி விஷம்போல் ஏறி மக்கள் கடுமை யாக பாதிக்கப்பட்டுள்ள னர். அதேபோல், சொத்து வரி, வீட்டு வரி, மின்சார கட்டணம், குடிநீர் வரி போன்ற பல வரிகளும் உயர்த்தப்பட்டுவிட்டது. இதனால், மக்களின் அன்றாட குடும்பச் சுமை பன்மடங்கு அதிகரித்துவிட்டது. எனவே, மக்களின் சுமையை குறைக்கும்வகையில்,ஒவ்வொரு குடும்பத்திற்கும் கருணைத் தொகையாக 10,000 ரூபாய் வழங்கப்படும். 2. வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து, வேலைக்காக காத்திருக்கும் பட்டதாரிகளுக்கு மாதந்தோறும் 2,000 ரூபாயும்; +2 வரை படித்து வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளவர்களுக்கு மாதந்தோறும் 1,000 ரூபாயும், உதவித் தொகையாக வழங்கப்படும். 3. மீன்பிடி தடைக் காலங்களில் மீனவர்களுக்கு, தற்போது வழங்கப்பட்டு வரும் நிவாரணத் தொகை 8,000 ரூபாயில் இருந்து 12,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். 4. ஒவ்வொரு ஆண்டும் தைப்பொங்கல் அன்று வழங்கப்பட்டு வரும் பொங்கல் தொகுப்புடன் சேர்த்து 1,000 ரூபாய் வழங்கப்படும். 5. கைத்தறி நெசவாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் இலவச மின்சாரம் 300 யூனிட்டில் இருந்து 450 யூனிட்டாகவும்; விசைத்தறி நெசவாளர்களுக்கு 1,000 யூனிட்டில் இருந்து 1,400 யூனிட்டாகவும் உயர்த்தி வழங்கப்படும்.

6. நகரப் பகுதிகளில் நடைபாதை ஓரமாக கடை வைத்திருக்கும் சிறு வியாபாரிகள், கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடன் தள்ளுபடி செய்யப்படும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.முன்னதாக,இரண்டாம் கட்ட தேர்தல் வாக்குறுதியில் * முதியோர் உள்ளிட்டவர்களுக்கான ஓய்வூதியங்கள் ரூ. 2,000-மாக உயர்வு

* வங்கிகளில் பெற்ற கல்விக் கடன் தள்ளுபடி

* வாழ்வாதார உதவியாக, ஆண்டுக்கு 3 கேஸ் சிலிண்டர்கள் வழங்கப்படும் * ஜல்லிக்கட்டில் உயிரிழந்தால் நிவாரணம்

சிறுபான்மையினருக்கான அறிவிப்புகளாக, இஸ்லாமிய, கிறிஸ்தவ மற்றும் ஏனைய சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த மகளிர் சுயதொழில் தொடங்குவதற்கு வட்டியில்லா கடன் வழங்கப்படும். மாற்றுத் திறனாளிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடன் தள்ளுபடி செய்யப்படும், ஆகிய வாக்குறுதிகள் இடம்பெற்றிருந்தது நினைவு கூரத்தக்கது.

அப்போது, "திமுக ஆட்சியில் வீட்டு வரி, சொத்து வரி, குடிநீர்க் கட்டணம் ஆகியவை உயர்த்தப்பட்டதால் மக்களின் சுமை அதிகரித்துள்ளது. அதனை குறைக்கும்பொருட்டு தேர்தலில்வெற்றிபெற்று அதிமுக ஆட்சி அமைத்தவுடன் ஒவ்வொரு குடும்பத்திற்கும் கருணைத்தொகையாக ரூ. 10,000 வழங்கப்படும்" என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

இதனிடையே, இலவசங்களால் நிதிப் பற்றாக்குறை ஏற்படுவதாக உச்ச நீதிமன்றம் தெரிவித்ததை குறிப்பிட்டு செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த இபிஎஸ், "வருவாயை உயர்த்தி பெருக்கி, அதன்மூலமாக நாங்கள் அறிவித்த திட்டங்களை மக்களுக்கு வழங்குவோம்" என்றார்.

தொடர்ந்து, வருவாய் உயர்த்துவது என்றால் வரியை உயர்த்தப் போகிறீர்களா என்று மீண்டும் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த இபிஎஸ், "அதனை தற்போது சொல்ல முடியாது. வரியை உயர்த்துவதில் பல்வேறு வழிகள் இருக்கின்றது. நிதித்துறையைச் சேர்ந்த நிபுணர்கள் மூலமாக ஆய்வு செய்து எந்தெந்த வகையில் வரியை உயர்த்த முடியுமோ அவ்வாறு உயர்த்தி, நிதியைப் பெற்று அறிவித்த திட்டங்களை செயல்படுத்துவோம்" எனத் தெரிவித்தார்.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

தினத்தளம்

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## தூத்துக்குடி விமானநிலையத்தில் முதலமைச்சர் ஸ்டாலின் வருகை வடக்கு மாவட்ட திமுக சார்பில் உற்சாக வரவேற்பு



கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காகத் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று தூத்துக்குடி வருகை தந்தார். அவருக்கு விமான நிலையத்தில் வடக்கு மாவட்ட திமுக சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் இன்று காலை தூத்துக்குடி வந்தடைந்தமுதலமைச்சரை மு.க.ஸ்டாலின், தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு, நிதி அமைச்சர்தங்கம்தென்னரசு, அமைச்சர்கள் கீதா ஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன், மனோ தங்கராஜ்ஆகியோர்வரவேற்றனர்.

மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் கே. இளம்பகவத், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்மதன், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, திருநெல்வேலி மேயர் ராமகிருஷ்ணன், நாகர்கோவில் மேயர் மகேஷ் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் பிரியங்கா, எம்.எல்.ஏ.க்கள் மார்க்கண்டேயன், சண்முகையா, முன்னாள் சபாநாயகர் தனபால் உள்ளிட்ட அரசு உயர் அதிகாரிகள் முதலமைச்சரை நேரில் வரவேற்றனர். மேலும் விமான நிலைய வரவேற்பிற்குப் பிறகு, கன்னியாகுமரியில் பல்வேறு நிகழ்ச்சி பயணமாக முதலமைச்சர் தூத்துக்குடியில் இருந்து சாலைமார்க்கமாகபுறப்பட்டுச் சென்றார். கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலை மற்றும் 'சில்வர் ஜூப்ளி' வளைவு ஆகியவற்றை முதலமைச்சர் திறந்து வைக்கிறார்.

அதனைத் தொடர்ந்து, கல்லடிவிளை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் சிலை, பொன்னப்ப நாடார் சிலை மற்றும் படிப்பகத்தைத் திறந்து வைக்கிறார். இன்று இரவு கன்னியாகுமரியில்தங்கும்முதலமைச்சர், நாளை காலை அங்குள்ள பள்ளி ஒன்றில் நடைபெறும் அரசு விழாவில் பங்கேற்கிறார். நிகழ்ச்சிகள் முடிந்த பின்னர், மீண்டும் தூத்துக்குடி விமான நிலையம் வந்து அங்கிருந்து விமானம் மூலம் சென்னை திரும்புகிறார்.



சேலம் புறநகர் மாவட்ட கழக செயலாளர் முன்னாள் தமிழ்நாடு கூட்டுறவு வங்கி தலைவர் R.இளங்கோவன் அறிவுறுத்தலின்படி ஜெயலலிதாவின் பிறந்தநாளை முன்னிட்டு ஏற்காடு ஒன்றிய கழக சார்பில் அன்பு இல்லத்தில் உள்ள குழந்தைகளுக்கு கேக் வழங்கி குழந்தைகளை மகிழ்வித்தனர். இதில் ★மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள் , சார்பணி செயலாளர்கள், நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

## முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 78வது பிறந்தநாள்: கூ.கவுண்டம்பாளையத்தில் உள்ள ஜெயலலிதா சிலைக்கு மாலை அணிவித்து பொதுமக்களுக்கு இனிப்பு, காலை உணவு வழங்கினர்



தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 78 வது பிறந்தநாளை ஒட்டி கோவை வடக்கு மாவட்ட அஇஅதிமுக சார்பாக பெரியநாயக்கன்பாளையம் அருகே உள்ள கூடலூர் கவுண்டம்பாளையம் பகுதியில் உள்ள எம்.ஜி.ஆர். ஜெயலலிதா ஆகியோரின் திரு உருவச்சிலைகளுக்கு கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். ஜி.அருண்குமார், மேட்டுப்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.கே.சின்னராஜ் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.மேலும்பொதுமக்களுக்குகாலைஉணவு வழங்கினர். அனைத்து இந்தியஅண்ணாதிராவிட முன்னேற்ற கழகத்தின் பொதுச்செயலாளரும், முன்னாள்தமிழகமுதல்வருமான மறைந்த ஜெயலலிதாவின் 78 வது பிறந்தநாளை அதிமுக வினர் கொண்டாடி வருகின்றனர். கோவை பெரியநாயக்கன்பாளையத்தை அடுத்த கூடலூர் கவுண்டம்பாளையத்தில் அனைத்திந்திய அண்ணா திடாவிட முன்னேற்ற கழகம் கோவை வடக்கு மாவட்டம் சார்பில் ஜெயலலிதாவின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடினர். இந்நிகழ்வில் கூடலூர் கவுண்டம்பாளையம் பகுதியில் உள்ள எம்.ஜி.ஆர். ஜெயலலிதா ஆகியோரின் திரு உருவச்சிலைகளுக்கு கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். ஜி.அருண்குமார், மேட்டுப்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.கே.சின்னராஜ் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.மேலும்பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினர். முன்னதாக பெரியநாயக்கன்பாளையம் பேருந்து நிறுத்தம் பகுதியில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த ஜெயலலிதாவின் உருவப்பத்திற்கு மலர் தூவி மரியாதை செய்தனர். மேலும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் மேட்டுப்பளையம் சட்டமன்ற உறுப்பினர் ஓ.கே.சின்ராஜ், ஒன்றிய செயலாளர் ஜெயராமன், நகர பொறுப்பாளர் சசிகுமார், நகர செயலாளர் குருந்தசாலம், ரகுநாதன், குருடம்பாளையம் முன்னாள் தலைவர் ரவி, நாகராஜ், கணேசன், செல்வராஜ், ஜி பி மோகன்தாஸ், சரவணகுமார், ரவிச்சந்திரன், முத்துகுமார், கதிர்வேல், ஐ டி விங் அஸ்வின், மகளிர் அணி மகளிர் அணி காந்திமதி, சுசிலா, கலாவதி, கவிதா, லலிதாம்பிகை உள்பட கழக நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் திரளானோர் கலந்து கொண்டனர்.



## உளுந்தூர்பேட்டை அருகே உள்ள திருநாவலூரில் ரூ.5 கோடியே 16 லட்சம் செலவில் புதியதாக கட்டிமுடிக்கப்பட்ட ஒழுங்குமுறை விற்பனை கூடத்தை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார்

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள திருநாவலூர் பகுதியில் சுமார் 50-க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் தங்கள்நிலத்தில்விளையும் தானியங்களை கொள்முதல் செய்வதற்காக உளுந்தூர்பேட்டை ஒழுங்குமுறைவிற்பனை கூடத்திற்கு வந்து செல்கின்றனர்இதனால்விவசாயிகளுக்கு போக்குவரத்து செலவு அதிகரித்து வருகிறது இந்த நிலையில் திருநாவலூரில் புதியதாக ஒழுங்குமுறை விற்பனை கூடம் அமைக்கவேண்டும்என அப்பகுதி மக்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்துவந்தனர்பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று திருநாவலூரில் புதியதாக ஒழுங்குமுறை விற்பனை கூடம் அமைக்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவிப்பு வெளியிட்ட நிலையில் ரூபாய் 5 கோடியே 16 லட்சத்து 9 ஆயிரம் ரூபாய் மதிப்பில் புதியதாக ஒழுங்குமுறை விற்பனை கூட கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது அதன் திறப்பு விழா கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் பிரசாந்த் தலைமையில் இன்று நடைபெற்றது இதில் தமிழக பொதுப்பணி துறை மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்துகொண்டு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்து குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார் இதில் சட்டமன்ற உறுப்பினர்கள் மணிக்கண்ணன், உதயசூரியன், வசந்தம் கார்த்திகேயன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின்பிரதிநிதிகள் அரசு அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 78வது பிறந்தநாள் விழா தென்காசி தெற்கு மாவட்ட சுரண்டை நகர கீழச்சுரண்டையில் மாவட்ட MGR மன்ற இணைச்செயலாளரும் சுரண்டை நகராட்சி 10வது வார்டு கவுன்சிலருமான S.மாரியப்பன் தலைமையில் நடைபெற்றது நிகழ்ச்சியில் புரட்சி தலைவி அம்மா அவர்களின் திரு உருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்பு வழங்கப்பட்டது . நிகழ்ச்சியில் சங்கரபாண்டி,பழனிசாமி, மாரியப்பன், முருகன், குமார்,துரை 25வது வார்டு செயலாளர். தங்கம்,பண்டாரம்,துரை, மகளிரணி லெட்சுமி,மாரியம்மாள், தங்கம்மாள், கலா,பார்வதி மற்றும் திரளான தொண்டர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

## தமிழக அரசு பட்டா வழங்கியும் வழங்கப்பட்ட பட்டாவிற்கான இடத்தை, அளந்து தராமல் இழுத்தடிக்கும் அரசு அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்

### தமிழக முற்போக்கு மக்கள் கட்சியினர் மாவட்ட ஆட்சியரிடம் மனு



தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் மாநில துணைத்தலைவரும், வழக்கறிஞருமான புஷ்பானந்தம் தலைமையில் பொதுமக்கள் பலர் பதாகைகளை ஏந்தியவாறு அலுவலகம் முன்பு மனு அளிக்கும் போராட்டத்தை நடத்தினர். பின்னர் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர். அந்த மனுவில் கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக பொதுமக்களுக்கான இலவசசட்ட ஆலோசனைகளை வழங்கி வரும், புஸ்பாணந்தம் மூலமாக, இலவச வீட்டு மனை பட்டாக்கள் வழங்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியரின் மனு அளித்ததன் பேரில்,மனு அளிக்கப்பட்ட பலருக்கு, பட்டா வழங்கப்பட்டுள்ளது இன்னும் மீதமுள்ள பலருக்கும் பட்டா கொடுக்கப்படவில்லை, குறிப்பாகவேலாண்டிபாளையம், தடாகம், சின்ன தடாகம், கணுவாய், பன்னிமடை, கேஎன்ஜி புதூர், கணபதி, போன்ற பகுதியை சேர்ந்த மக்கள் பட்டா கேட்டு விண்ணப்பம் வழங்கிய நிலையில் பாதி பேருக்கு வந்துள்ளது மீதி உள்ளவர்களுக்கு வரவில்லை பட்டா வழங்கிய பாதி பேருக்கும் அதற்கான இடத்தை அதிகாரிகள் இன்று வரை அளந்து தரவில்லை எனவும், வட்டாட்சியர், சர்வேயர், உள்ளிட்ட அதிகாரிகளிடம், இது குறித்து கேள்வி எழுப்பினால் எந்தவிதபதிலும்தெரிவிக்காமல் காலம் தாழ்த்துகின்றனர் என, புகார் அளித்துள்ளதாக கூறினர். மேலும், அரசு வழங்கிய சலுகை வீட்டு மனை பட்டாக்களை, பயன்படுத்த முடியாமல் தவிக்க விடும், அரசு அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனு அளித்தனர். இந்த மனு அளிக்கும் பொழுது வழக்கறிஞர் குமாஸ்தாக்கள் லட்சுமி, திவ்யா, பால்ராஜ்,

பட்டா ஏற்பாடு செய்பவர் அமுல் ராஜ், சாந்தாமணி, பரக்கத் நிஷா, திலிப், கௌசல்யா, சுகந்தி செல்வம், பவுனம்மாள், ஜெயலட்சுமி, அம்பிகா, ஜெகதீஸ்வரன், பிரியதர்ஷினி , ஆனந்த், லலிதாம்பிகை,ஜோதிமணி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தெருமுனை பிரச்சார கூட்டத்திற்கு மிரட்டல் பாஜக ஒருபோதும் அஞ்சாது

### தூத்துக்குடி மேயருக்கு பாஜக மாவட்ட தலைவர் கண்டனம்

தூத்துக்குடியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மேயர் ஜெகன் பெரியசாமி பேசிய விதம் அராஜகப் போக்கின் உச்சம் என்றும், அரசியல் மிரட்டல் விடுக்கும் செயலை பாஜக ஏற்காது என்றும் மாவட்ட



தலைவர் சித்ராங்கதன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தூத்துக்குடி மாவட்ட பாரதிய ஜனதா கட்சி தலைவர் சித்ராங்கதன் வெளியிட்டுள்ள அறிக்கையில்கூறப்பட்டுள்ளதாவது:கடந்த22.02.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று, அமைச்சர் கீதா ஜீவன் தலைமையில் தூத்துக்குடி VVD சிக்னல் அருகே நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மேயர் ஜெகன் பெரியசாமி உரையாற்றினார். அப்போது, பாஜக மாவட்ட துணைத் தலைவர் சண்முக சுந்தரம் அவர்கள் மாநகராட்சி ஊழல்கள் குறித்து எழுப்பிய கேள்விகளுக்குப் பதில் அளிக்க முடியாமல், மேடை நாகரிகம் இன்றி அரசியல் மிரட்டல் விடுத்துள்ளார்.

"கூட்டம் நடத்த விடமாட்டோம்", "தொண்டர்களை இறக்குவோம்", "30 ஆண்டுகளுக்கு முன் நடந்தது மீண்டும் நடக்கலாம்" என மேயர் பேசியிருப்பது பொது அமைதிக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகும். இது போன்ற வன்முறையைத் தூண்டும் பேச்சுகள் ஜனநாயகத்திற்கு எதிரானது.

மாநகராட்சியில் நடைபெறும் முறைகேடுகள் மற்றும் பராமரிப்பு குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவது ஒரு எதிர்க்கட்சியின் கடமை. தெருமுனைப் பிரச்சாரங்கள் மூலம் மக்களின் வரிப்பணம் வீணடிக்கப்படுவதை ஆதாரங்களுடன் விளக்கி வருகிறோம். இதைத் தடுத்து நிறுத்தவே இத்தகைய அவதூறுகளும், அச்சுறுத்தல்களும் பரப்பப்படுகின்றன.

"அராஜக மற்றும் மிரட்டல் அரசியலுக்கு பாஜக ஒருபோதும் அஞ்சாது. தூத்துக்குடி மாநகராட்சியில் நடைபெறும் ஊழல்களை ஆதாரங்களுடன் மக்களிடம் கொண்டு செல்லும் ஜனநாயகப் போராட்டம் தொடரும். அதிகாரத்தில் இருப்பவர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும், மேயரின் இத்தகைய பேச்சுக்கள் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என்றும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## கோவை அரசூர் பகுதியில் உள்ள கேபிஆர் கலைக்கல்லூரியில் பல்துறை ஆராய்ச்சி மாநாடு

### இன்னோவேட் 26 எனும் நிகழ்ச்சி நடைபெற்றது



கோவை கேபிஆர் கலைஅறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரியில் பல்துறை ஆராய்ச்சி மாநாடு- இன்னோவேட் 2, எனும் தலைப்பில் கல்லூரிக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர் முனைவர் கீதா தலைமையுரை ஆற்றினார். அவரைத் தொடர்ந்து கல்லூரியின் செயலர் காயத்ரி அனந்தகிருஷ்ணன் வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்வில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையப் புல முதன்மையர் முனைவர். யுவராஜ் சிவலிங்கம் வரவேற்புரை ஆற்றினார். நோக்கவுரையை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்துறையின் தலைவர் முனைவர் ஸ்ரீ கலா வழங்கினார். திருச்சிராப்பள்ளி தேசிய தொழில்நுட்பக் கழகம் மேலாண்மையியல் துறைப்பேராசிரியர் முனைவர் தாமரைச் செல்வன் நடராஜன் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு ஆராய்ச்சி மாநாட்டினைத்தொடங்கிவைத்துபேராசிரியர்கள் மற்றும் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் தன்னை ஆராய்ச்சியில் எவ்வாறு மேம்படுத்திக் கொள்வது தரமான ஆய்வுத் தரவுகளைத் தருதல் ஆராய்ச்சியை அடுத்த கட்ட வளர்ச்சிக்கு எடுத்துச் செல்லுதல் குறித்தும் எதிர்கால ஆய்வுக்களங்கள் பற்றியும் சிறப்புரை ஆற்றினார். அவரைத் தொடர்ந்து பாலக்காடு இந்திய தொழில்நுட்பக் கழகம் இணை கல்விப்புல முதன்மையர் முனைவர் ரஞ்சன் சரங்கி மாநாட்டு மலரினை வெளியிட்டு ஆராய்ச்சி என்பது சமூகப் பயன்நிறைந்தாகவும் புதிய அணு குமுறைகளை வெளிக்காட்டுவதாகவும் பல்துறைசார்ந்த ஆய்வு மேம்பாட்டினை அடைய வழிவகை செய்வதாக அமைதல் வேண்டும் என்று கூறிச் சிறப்புரை ஆற்றினார். மாநாட்டு அமர்வில் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் தங்களின் ஆய்வுச்சுருக்கம் குறித்த கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் ஒருங்கிணைத்த இந்நிகழ்வில் புல முதன்மையர்கள், பேராசிரியர்கள், 90 - கும் மேற்பட்ட முனைவர்பட்ட ஆய்வாளர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

## யுனைடெட் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் வணிகவியல்துறை சார்பாக யுகாம் பாராளுமன்ற கூட்டம் ஆளும் கட்சி, எதிர்கட்சிகளாக மாணவர்கள் விவாதம்



கோவை பெரியநாயக்கன்பாளையம் யுனைடெட் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் வணிகவியல்துறைசார்பாக யுகாம் பாராளுமன்ற கூட்டம் கல்லூரியில் நடைபெற்றது.இதில் மாணவர்கள் ஆளுங்கட்சி உறுப்பினர்களாகவும் எதிர்க்கட்சி உறுப்பினர்களாகவும் அமர்ந்து அன்றைய நாட்டு நடப்பு குறித்த தங்களுடைய வாதங்களை முன் வைத்தனர்.மேலும்பதவி ஏற்பு முதல் விவாதம், சட்டம்இயற்றுதல்,வாக்கெடுப்பு, வெளிநடப்பு என பாராளுமன்ற நடவடிக்கைகளை தத்ருபமாக நடத்திக் காட்டினர்.

கோவை பெரியநாயக்கன்பாளையம் யுனைடெட் கல்வி நிறுவனங்களின் ஓர் அங்கமான யுனைடெட்கலைமற்றும் அறிவியல் கல்லூரியின் வணிகவியல்துறைசார்பாகயுகாம்பாராளுமன்ற கூட்டமானது கல்லூரியின் சரஸ்வதி அரங்கில் நடைபெற்றது.

பாராளுமன்றதொடக்க நிகழ்வாக சபாநாயகர் வந்தவுடன் தேசிய கீதம் பாடப்பட்டது. அதைத் தொடர்ந்து மறைந்த முன்னாள் உறுப்பினர்கள்,தலைவர்கள் மறைவிற்கு மௌன அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து தேசிய அளவில் சாதனைகள் புரிந்தவர்களுக்கு பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டது.

சிறப்பு விருந்தினராக சார்டட் அக்கௌண்டட், ரீஜினல் கவுன்சில் மெம்பர், எஸ் ஐ ஆர் சி ஆப் ஐசிஏஐ சிஏ ராஜேஷ் கலந்து கொண்டு தற்பொழுது அறிவிக்கப்பட்டுள்ளபட்ஜெட்குறித்தும் அதில் மாணவர்கள் அறிந்துக் கொள்ள வேண்டிய முக்கியமான பகுதிகள் குறித்தும் எடுத்துரைத்தார். மேலும் நாடாளுமன்றத்தின் செயல்பாடுகள் குறித்த ஒரு முன்னுரை யை வழங்கினார்.

வணிகவியல் துறை சார்ந்த30க்கும்மேற்பட்ட மாணவர்கள் ஆளுங்கட்சி உறுப்பினர்களாகவும் எதிர்க்கட்சி உறுப்பினர்களாகவும் அன்றைய நாட்டு நடப்பு குறித்த தங்களுடைய வாதங்களை முன்வைத்தனர். இந்திய பாராளுமன்றம் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை மாணவ மாணவிகள் தத்ரூபமாக பதவி ஏற்பு முதல் விவதம், சட்டம் இயற்றுதல், வாக்கெடுப்பு, வெளிநடப்பு என பாராளுமன்ற நடவடிக்கைகளை தத்ருபமாக நடத்திக் காட்டியதை மாணவ மாணவிகள் கண்டு ரசித்தனர்.

யுனைடெட் கல்வி குழுமத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் பொறியாளர் சண்முகம் முன்னிலையில் இம்மாதிரிக் கூட்டம் நடைபெற்றது. யுனைடெட் கலைமற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் விஜயா தலைமையுரையாற்றினார். வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் தேவிப்பிரியா மற்றும் வணிகவியல் துறைப் பேராசிரியர்கள் இந்நிகழ்வினை ஒருங்கிணைத்தார்கள்.

## ஜெயலலிதாவின் 78வது பிறந்தநாளை முன்னிட்டு பெரியகுளத்தில் மாபெரும் அன்னதான நிகழ்ச்சி



தேனி மாவட்டம் பெரியகுளத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி ஆணைக்கிணங்க பெரியகுளம் நகர் கழகம் சார்பில் தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் 78வது பிறந்த நாளினை முன்னிட்டு பெரியகுளம் பழைய பேருந்து நிலையம் பகுதியில் உள்ள அண்ணா சிலை அருகே வைக்கப்பட்டிருந்த ஜெயலலிதாவின்திருவுருவ படத்திற்கு தேனி (கி) மாவட்ட செயலாளர் முறுக்கோடை ராமர் வழிகாட்டுதலின்படி பெரியகுளம் நகர் கழக செயலாளர் பழனியப்பன் தலைமையில் அஇஅதிமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். மேலும் 2026 சட்டமன்ற பொதுத்தேர்தலில் அம்மாவின் ஆட்சி அமைய பாடுபடுவேம் என உறுதிமொழி ஏற்றனர். இதனைத் தொடர்ந்து மாவட்ட செயலர் முருக்கோடை ராமர் தலைமையில், ஒன்றிய செயலாளர் அன்ன பிரகாஷ் முன்னிலையில் மாவட்ட கழக இணைச் செயலாளர் முத்து லெட்சுமி ஏற்பாட்டில் பெரியகுளம் ஆடுபாலம் பகுதியில் பொதுமக்களுக்கு மாபெரும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கழக அம்மா பேரவை மாநில துணைச் செயலாளர் ஜெயக்குமார், இளைஞர் இளம்பெண்கள் பாசறை தேனி (கி) மாவட்ட செயலாளர் அப்பாஸ் மைதீன், பெரியகுளம் (கி) ஒன்றிய செயலாளர் ராஜகுரு, தென்கரைப் பேரூர் செயலாளர் ஆண்டவர்தேனி நகர் கழக செயலாளர் கிருஷ்ணகுமார்,நகர இணைசெயலாளர் முத்துலட்சுமி, துணை செயலாளர் வெங்கடேசன், நகர அம்மா பேரவை துணைச் செயலாளர் இனாமுல் அசன், இலக்கிய அணி செயலாளர்தவமணி,வழக்கறிஞர் தவமணி கருப்பசாமி. சிறுபான்மை பிரிவு சலீம், மாவட்ட பிரதிநிதி விஜய் ஆனந்த், மோகன், செந்தட்டி காளை, ஈஸ்வரன் துரைப்பாண்டி, கணேசன், பாப்பா இளமுருகன், பேரூர் பிரிவு செயலா ளர் ஆ முருகேசன் உட்பட மாவட்ட,நகர, ஒன்றிய கழக நிர்வாகிகள், பேரூர் கழக நிர்வாகிகள், பொறுப்பாளர்கள்,உள்ளாட்சிபிரதிநிதிகள், சார்பு அணியினர், கழக தொண்டர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம் பவானியில் அதிமுக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 78வது பிறந்த தினத்தை முன்னிட்டு, பவானி நகர அதிமுக சார்பில் அம்மா உணவகத்தில் காலை உணவு வழங்கும் விழா நடைபெற்றது. நகர அதிமுக செயலாளர் சீனிவாசன் தலைமையில் பொதுமக்களுக்கு உணவுகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் நகர மன்ற உறுப்பினர்கள், இளைஞர் இளம்பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர், தலைமை கழக பேச்சாளர் மற்றும் அதிமுக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.




## ஈரோட்டில் உருவாகும் மிகப்பிரம்மாண்டமான ஃபார்ச்சூன் சிட்டி

ஈரோடு டெக்ஸ்வேலி இனி ஃபார்ச்சூன் சிட்டியாக உருவெடுக்கிறது. இனி டெக்ஸ்வேலியே ஃபார்ச்சூன் சிட்டிக்குள் தான் இருக்கப்போகிறது. இங்கே டைடல் பார்க் மட்டுமின்றி மாபெரும் ஷாப்பிங் சந்தையே உருவாகவுள்ளது. இங்குள்ள மால்களில் சர்வதேச தரத்தில் பல முன்னணி பிராண்டுகளின் அவுட்லெட்டுகள், சூப்பர் மார்க்கெட்டுகள், Co-Living..

முன்னணி உணவகங்களின் ரெஸ்டாரெண்டுகள், ஃபுட் கோர்ட்டுகள், ஒரே நேரத்தில் 120 கார்களுக்கு சார்ஜ் செய்யும் வசதியுடன்பரந்துவிரிந்த சார்ஜ் ஸ்டேஷன், திரையரங்கங்கள், குழந்தைகள் விளையாடி மகிழ மெகா கேம் ஜோன், வெட்டிங் & மீட்டிங் ஃபங்ஷன் ஹால், கார்ப்பரேட் அலுவலகங்கள்..முன்னணி ரியல் எஸ்டேட் ப்ரமோட்டர்கள் கட்டுகின்ற குடியிருப்புகள் என சகலவிதமான வசதிகளுடன் ஃபார்ச்சூன் சிட்டியானது அமைய உள்ளது. ஈரோட்டில் ஒரு சிட்டி experience உருவாக்க உள்ளது. அனைத்தும் 2026 மார்ச் துவங்கி இன்னும் ஓராண்டுக்குள் நிறைவடையும்படி துரிதமாக பணிகள் நடைபெற்று வருகின்றன.

முதல் கட்டமாக துவக்கமாக துபாய், சிங்கப்பூர் போல பிரம்மாண்டமான "யாரா" ஹைப்பர் மார்க்கெட்.. 15க்கும் மேற்பட்ட இண்டர்நேஷனல் பிராண்டுகளின் புதிய அவுட்லெட்டுகள்.. 18000 சதுரடியில் குழந்தைகள் விளையாடி மகிழ பிரம்மாண்டமான பிரத்யேக "Relax Fun Zone"

மாத வாடகையில் 2 Seaterto300Seaters கொண்ட கார்ப்பரேட் அலுவலகங்களுக்கான வொர்க் ப்ளேஸ் மற்றும் ஏராளமான உணவுகள் அணிவகுக்கும் 500 Seater-களுடன் ஃபுட் கோர்ட் வசதி ஏற்ப்பாடு.

3000 Cars & 3000 Two Wheelers நிறுத்தக்கூடிய விசாலமான கார் பார்க்கிங், டூவீலர் பார்க்கிங்

இரண்டாம் கட்டமாக தென்னிந்தியாவின் பிரபலமான சைவ/ அசைவ உணவகங்களின் கடைகள்.சர்வதேச தரத்தில் ரெஸ்டோ பார்.நவீன யுகத்திற்கான பிரம்மாண்டமான வெட்டிங் ஹால். டிஜிட்டல் துல்லியத்துடன் திரையரங்கங்கள்,ஒரே நேரத்தில் 120 கார்களுக்கு FAST சார்ஜ் செய்யும் மெகா சார்ஜர் ஸ்டேஷன்.

முதன்முறையாக Wedding Shopping, போன்ற எண்ணற்ற வசதிகளுடன் மக்களின் தேவைகளை எல்லாவற்றையும் பூர்த்தி செய்யும் விதமாக இந்த நிறுவனமானது புதிய உத்வேகத்துடன் புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

### தூத்துக்குடியில் ஜெயலலிதாவி 78வது பிறந்தநாளை முன்னிட்டு

## அ.தி.மு.க. சார்பில் பெண்களுக்கான கோலப்போட்டி முன்னாள் எம்.பி. நட்டார்ஜி பரிசுகள் வழங்கினார்



மறைந்த முன்னாள் முதலமைச்சர்ஜெ.ஜெயலலிதாவின் 78வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தூத்துக்குடி ஏ.எஸ்.கே.ஆர் மண்டபத்தில் அ.இ.அ.தி.மு.க சார்பில் பெண்களுக்கான கோலப்போட்டி நடைபெற்றது.

நிகழ்விற்கு கழக முன்னாள் அமைப்புசெயலாளரும் முன்னாள் எம்.பி.யுமான ஜெ.ஜெ.டி நட்டார்ஜி கோலப்போட்டியில் வெற்றி பெற்ற மற்றும் கலந்து கொண்ட அனைத்து பெண்களுக்கும் பரிசுகள் வழங்கினார்.

பெண்களுக்கான கோலப்போட்டி ஏற்பாடுகளை அனைத்தும் எம்.ஜி.ஆர் இளைஞரணி ஜெ.ஜோசப் சாமுவேல் நட்டர்ஜி சிறப்பாக செய்திருந்தார்.

மேலும் இந்த கோலப்போட்டியில் 78 பெண்கள் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்ட அனைத்து பெண்களுக்கும் ஆறுதல் பரிசுகள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மாவட்ட எம்.ஜி.ஆர்.மன்ற இணை செயலாளர் சத்யா இலட்சுமணன், கழக நிர்வாகிகள் இருதயராஜ், அந்தோணிராஜ், முத்துக்குமார், 47 வது வார்டு இளைஞரணி செயலாளர் ஜெ.ஹெர்மஸ் மற்றும் நிர்வாகிகள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தூத்துக்குடி அண்ணாசிலை பகுதியில் வேகத்தடை அமைக்க வேண்டும்

### சமத்துவ மக்கள் கழகத்தின் செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம்



தூத்துக்குடி தேவர் புரம் ரோட்டில் உள்ள மாவட்ட தலைமைஅலுவலகத்தில்சமத்துவமக்கள்கழகத்தின் மாநகரச் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாநகரச் செயலாளர் முத்துச்செல்வம் தலைமை தாங்கினார். மாநகர அவைத்தலைவர் மதியழகன் மற்றும் மாநகர துணை செயலாளர் சந்திரசேகர் முன்னிலை வகித்தனர். மாநகர இளைஞரணி செயலாளர் முருகன் வரவேற்புரை ஆற்றினார்.

மாவட்ட செயலாளர் மாலைசூடி அற்புதராஜ், மாநில தொழிற்சங்க செயலாளர் ஜெபராஜ் டேவிட், மாநில கலை இலக்கிய அணி செயலாளர் வக்கீல் அந்தோணி பிச்சை, மாநில வழக்கறிஞர் அணி துணைச் செயலாளர் வக்கீல் சகாயராஜ் மற்றும் நாடார் பேரவை மாவட்ட தலைவர் அருண் சுரேஷ் குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாநகர மாணவரணி செயலாளர் விஜய் கார்த்திக் நன்றியுரை ஆற்றினார்.

தூத்துக்குடியின் பிரதான பகுதியான மாநகராட்சி அலுவலகம் மற்றும் காய்கனி மார்க்கெட் அருகில் அண்ணா சிலையை சுற்றி ஐந்து ரோடுகள் சந்திப்பில் பலகல்வி நிறுவனங்கள் மருத்துவமனைகள் வர்த்தக நிறுவனங்கள் இயங்கி வருகிறது ஆனால் பொதுமக்கள் மாணவர்கள் பாதுகாப்பு கருதி அந்த பகுதிகளில் முறையான வேகத்தடைகள் இல்லாததால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகிறது ஆகவே அண்ணா சிலை அருகில் பால விநாயகர் கோவில் தெரு முகப்பு, ஜெயம் சூப்பர் மார்க்கெட் முன்பு ஆகிய பகுதிகளில் உடனடியாக வேகத்தடை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் கண்டிவேல், மாவட்ட துணைச் செயலாளர் அருள்ராஜ், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் ஜோசப், உதயசூரியன் மற்றும் மாவட்ட, மாநகர, வார்டு நிர்வாகிகள் எனப் திரளானோர் கலந்து கொண்டனர்.

## பெண் கொலை செய்யப்பட்ட வழக்கில் வாலிபர் கைது



ஈரோடு நகர உட்கோட்டம், ஈரோடு தாலுக்கா காவல் நிலையம், ரங்கம்பாளையம் மேம்பாலம் அருகில் அழுகிய நிலையில் நிர்வாணமாக பெண் கொலை செய்யப்பட்டு கிடப்பதாக கடந்த 10.02.2026ம் தேதி கிடைத்த புகாரின் பேரில்,ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி.A.சுஜாதா அவர்களின் உத்தரவின் பேரில், குற்றவாளியை கண்டுபிடிக்க ஈரோடு டவுன் காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையில் 5 தனிப்படை கள் அமைக்கப்பட்டு குற்றவாளியை கண்டுபிடிக்க தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில்,இன்று 23.02.2026ம் தேதி மேற்படி கொலையான நர்மதா(23), த/பெ. செல்வராஜ், பிச்சாண்டாம்பாளையம், வாய்க்கால் மேடு, பெருந்துறை ரோடு, ஈரோடு என்பவரை கொலை செய்த ரங்கம்பாளையம், பாரதிநகர், ராஜீ மகன் தீபன்குமார் என்பவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தபட உள்ளது.

### கடந்து வந்த பாதையை மீண்டும் நினைத்து பார்த்த நிறுவனம்

## தங்களது வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த வாடிக்கையாளர்களை அழைத்து பெருமைபடுத்திய மெட்ராஸ் மாடர்ன் டூரிஸம் நிறுவனம்

### கோவையில் நடைபெற்ற நெகிழ்ச்சி சம்பவம்




துபாய் நாட்டில் கடந்த மூன்று ஆண்டுகளாக, சுற்றுலா துறையில் சாத்னை படைத்து வரும், மெட்ராஸ் மாடர்ன் டூரிஸம் நிறுவனம், கோவை செல்வபுரம் பகுதியில் துவங்கி, ஒரு ஆண்டை நிறைவு செய்துள்ளது. இதனை விழா போல இந்நிருவனம் கொண்டாடியது,இந்த நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக சின்னத்திரை நட்சத்திரம்புகழ்கலந்து கொண்டு, குத்துவிளக்கேற்றி வைத்தும், கேக் வெட்டியும், ஒரு ஆண்டை கடக்க உறுதுணையாக இருந்த வாடிக்கையாளர்களுக்கு இனிப்புகள், மற்றும் பரிசுகளை வழங்கினார். தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய மெட்ராஸ் மாடர்ன் டூரிஸம் நிறுவனத்தின் உரிமையாளர் ராஜேஸ்வரி பெருமாள் செய்தியாளர்களிடம் கூறியதாவது..

சர்வதேச டூர் பேக்கேஜ், குடும்ப சகிதம் மற்றும் குழு சகித பேக்கேஜ், டொமெஸ்டிக் டூர் பேக்கேஜ், உலக அளவிலான விசா சேவைகள், விமானம், பஸ், ட்ரைன் உள்ளிட்டவைகளுக்கான டிக்கெட் புக்கிங், ட்ராவல் இன்சூரன்ஸ் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை சிறந்த முறையில் இங்கு வழங்கி வருவதாகவும், நமது நிறுவனம் மூலமாகஇதுவரை 300க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் வெளிநாடுகளுக்கும் ஆயிரக்கணக்கானோர், உள்ளூர் சுற்றுலா வும் சென்று மகிழ்ச்சியுடன் திரும்பி வந்துள்ளனர். அவ்வாறு எங்களது வளர்ச்சிக்கு வித்திட்ட வாடிக்கையாளர்களை பெருமை படுத்தும் நிகழ்ச்சியாக இந்த விழா நடைபெற்று வருகின்றது என தெரிவித்தார் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய சின்னதிரை நட்சத்திரம் புகழ் கூறியதாவது.. நான் எங்கு சென்றாலும் எனக்கு அனைத்து டிக்கெட்களையும் இந்த நிறுவனம் கொள்கிறேன் நீங்களும் ஆதரவு தாருங்கள் என்றார். மேலும் தற்போது, சின்ன சின்ன பட்ஜெட்களில் ஆயிரகணக்கான திரைப்படங்கள் ஒடிடியில் வெளியாகி வருகின்றது. இதன் மூலம் சினிமா துறை பெரிய அளவில் வளர்ச்சி கண்டுள்ளது, மேலும் நடிப்பு திறன் கொண்ட பலரது திறன் இதன் மூலமாக வெளிவந்துள்ளது. இதை நான் வரவேற்கிறேன் என்றார். மேலும் சினிமா என்பது எனது உயிர், திரையுலகில், சின்ன சின்ன படங்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்கமுன்வரவேண்டும் என்பதே எனது நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது என்றார்..



தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் 78வது பிறந்த நாளை முன்னிட்டு, ஈரோடு மாநகர் பெரியார் நகரில் அஇஅதிமுக கழகம் சார்பில் பகுதி செயலாளர் இரா.மனோகரன் தலைமையில் அதிமுகவினர் ஜெயலலிதாவின் திருவுரு படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்ச்சியில் ஈரோடு மாநகர மாவட்ட அஇஅதிமுக செயலாளர் கே.வி. இராமலிங்கம், மாவட்ட எம்.ஜி.ஆர்.மன்ற செயலாளர் கே.சி. பழனிச்சாமி மற்றும் கட்சியின் அனைத்து நிலை பொறுப்பாளர்களும் கலந்துகொண்டனர்.



சென்னை நேரு விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மாநில அளவிலான கயிறு இழுக்கும் போட்டியில் 37 அணிகள் பங்கேற்றன. விறுவிறுப்பாக நடைபெற்ற ஆண்களுக்கான இறுதிப் போட்டியில், ஈரோடு அணியை வீழ்த்தி திருவண்ணாமலை அணி முதலிடம் பிடித்து சாம்பியன் பட்டத்தை வென்றது.இரண்டாமிடம் பிடித்த ஈரோடு அணி உள்ளிட்ட வெற்றி பெற்ற வீரர்களுக்குப் பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

# ஊத்தங்கரை ஒன்றியத்தில் அதிமுக சார்பில் ஜெயலலிதாவின் 78 ஆவது பிறந்தநாள் விழா



கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை ஒன்றியத்தில் அதிமுக சார்பில் முதல்வர் ஜெயலலிதா 78 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அனைத்து ஒன்றிய செயலாளர்கள் தலைமையில் அன்னதானம் வழங்கியும் இனிப்பு வழங்கியும் கொண்டாடினார்.சிங்காரப்பேட்டை அதிமுக சார்பில் மத்திய ஒன்றிய செயலாளர் திருஞானம் தலைமையிலும், மவுனூர் பட்டியில் வடக்கு ஒன்றிய செயலாளர் வேடி தலைமையிலும், கல்லாவியில் தெற்கு ஒன்றிய செயலாளர் வேங்கன் தலைமையிலும், ஊத்தங்கரை நகரில் நகர செயலாளர் ஆறுமுகம் தலைமையிலும், சாமல்பட்டியில் மத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் நரேஷ் குமார் தலைமையிலும் நடைபெற்றவிழாக்களில் ஜெயலலிதா திரு உருவப்படத்திற்கு மரியாதை செலுத்தி இனிப்பு வழங்கியும் அன்னதானம் வழங்கினார் ஊத்தங்கரை எம் எல் ஏ தமிழ்செல்வம். நிகழ்ச்சியில் முன்னாள் எம்எல்ஏ கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர் சாகுல் ஹமீது ,மாவட்ட பொருளாளர் சுந்தர வடிவேல்,மாவட்ட மருத்துவர் அணி செயலாளர் டாக்டர் இளையராஜா, முன்னாள் ஒன்றிய செயலாளர் தேவேந்திரன், முன்னாள் நகர செயலாளர் சிவானந்தம் ,விவசாய அணி பொறுப்பாளர் ஜீவானந்தம் மற்றும் சார்பு அமைப்பு பொறுப்பாளர்கள், கிளைக் கழக செயலாளர் ,கழகத் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# "ஓபிஎஸ் பற்றி ஒருபோதும் தரக்குறைவாக விமர்சித்தது இல்லை" டிடிவி தினகரன் விளக்கம்



திருநெல்வேலி: "எந்தக் கட்சியில் இணைவது அல்லது யாருடன் கூட்டணி அமைப்பது என்பது ஓபிஎஸ்ஸின் தனிப்பட்ட விருப்பம்சார்ந்தஉரிமை" என்று அமமுக பொதுச் செயலர் டிடிவி தினகரன் தெரிவித்தார்.

திருநெல்வேலியில் இன்று செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "ஓபிஎஸ் மீது தனக்கு எப்போதும் தனிப்பட்ட மரியாதை உண்டு. எந்தக் கட்சியில் இணைவது அல்லது யாருடன் கூட்டணி அமைப்பது என்பது அவரது தனிப்பட்ட விருப்பம்சார்ந்தஉரிமை. அவரைப் பற்றி ஒருபோதும் நான் தரக்குறைவாக விமர்சித்தது இல்லை.

அண்மையில் சட்டப் பேரவையில் சட்டப் பேரவை உறுப்பினர் ஐயப்பன் பேசும்போது, தமிழக முதல்வர் ஸ்டாலின், எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயலலிதா ஆகியோரின் ஆசியுடன் வெற்றி பெற்றதாகப் பேசியது, அந்த இரு பெரும் தலைவர்களின் புகழுக்கு இழைக்கப்பட்ட அவமதிப்பு என்பதை சுட்டிக்காட்டியிருந்தேன்.

அந்தப் பேச்சை எக்காரணம் கொண்டும் உண்மையான தொண்டர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.அந்த தலைவர்களின் கொள்கைகளுக்கு எதிரானவர்களோடு அவர்களை தொடர்புபடுத்துவது கண்டிக்கத்தக்கது. மத்திய அரசின் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்கள் அதிர்ச்சி அளிக்கின்றன. தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் ஈடுபடும் குற்றச் செயல்கள் 47 சதவீதம் அதிகரித்துள்ளது. இதற்கு பின்னால் உள்ள முக்கியக் காரணி போதைப் பொருட்களின் தடையற்ற புழக்கம்.

திருநெல்வேலி உள்ளிட்ட தென் மாவட்டங்களில்அண்மையில்நடைபெற்ற கொலைச் சம்பவங்களில் பள்ளி மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் கையில் கத்தியுடன் ஈடுபடுவதும், ஆசிரியர்களைத் தாக்கும் துணிச்சலைப் பெற்றிருப்பதும் தமிழகம் எத்தகைய மோசமான சூழலை நோக்கிச் செல்கிறது என்பதை காட்டுகிறது. தமிழகம் அமைதிப் பூங்காவாக இருப்பதாக முதல்வர் கூறுவது வெறும் காகித அறிக்கை மட்டுமே. உண்மையில் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களால் தமிழகத்தின் எதிர்காலத்தலைமுறைசீரழிந்து வருகிறது. தமிழக அமைச்சரவையில் செல்வாக்கு மிக்க அமைச்சராக உள்ள கே.என்.நேருவின் கட்டுப்பாட்டில் இருக்கும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் வரலாறு காணாத ஊழல் நடைபெற்றுள்ளது. இத்துறையில் பணியிட மாற்றங்கள் மற்றும் பதவி உயர்வுகளுக்காக ரூ.7 லட்சம் முதல் 1 கோடி ரூபாய் வரை லஞ்சம் பெறப்படுகிறது. இதன் மூலம் ரூ.2,500 கோடி ரூபாய் வரை முறைகேடுகள் நடந்திருப்பதாக அமலாக்கத் துறை ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டியுள்ளது.

# ஈரோடு மாநகர் எம்.ஜி.ஆர். நகரில் புதிய சிமெண்ட் சாலைப்பணிகள் மாநகராட்சி ஆணையர் அர்பித் ஜெயின் நேரில் ஆய்வு



ஈரோடு மாநகராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு அடிப்படை உள்கட்டமைப்புப் பணிகளை மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் நேற்று (24.02.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதன் ஒரு பகுதியாக, மண்டலம் – 2, வார்டு எண் – 12-க்கு உட்பட்ட எம்.ஜி.ஆர் நகர் (M.G.R Nagar) பகுதியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காகப் புதிதாக அமைக்கப்பட்டு வரும் சிமெண்ட் கான்கிரீட் (CC Road) சாலைப் பணிகளை அவர் ஆய்வு செய்தார்.

கலவையின் அளவு உறுதித்தன்மைகுறித்துப் பொறியாளர்களிடம் கேட்டறிந்த ஆணையர், பணிகளை நிர்ணயிக்க ப்பட்ட காலத்திற்குள் விரைந்து முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு விடுவிக்க உத்தரவிட்டார். இந்த ஆய்வின் போது, சாலைப் பணிகளால் அப்பகுதி மக்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாத வண்ணம் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், தரக் கட்டுப்பாட்டு விதிகளை முறையாகப் பின்பற்றவும் அறிவுறுத்தினார்.

# பாலக்காடு ஐஐடியில் தமிழக மாணவி மீது தாக்குதல்... கேரளாவில் பயங்கரம்



பாலக்காடு: கேரளாவின் பாலக்காட்டில் உள்ள ஐஐடியில் தமிழகத்தைச் சேர்ந்த மாணவி மீது மர்மநபர் தாக்குதல் நடத்திய சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பாலக்காடு மாவட்டம் காஞ்சிகோட்டில் உள்ள ஐஐடியில் தமிழ்நாட்டின் சேலத்தை சேர்ந்த மாணவி டேட்டாசயின்ஸ் இன்ஜினியரிங் 4-ம் ஆண்டு படித்து வருகிறார். ஐஐடி வளாகத்தில் உள்ள விடுதியில் தங்கியுள்ள அவர், (பிப்.23) இரவு 8.30 மணியளவில் தனது நண்பர்களுடன் இணைந்து, மெஸ்ஸுக்கு உணவு அருந்த நடந்து சென்றுள்ளார்.

அப்போது, அடையாளம் தெரியாத ஒருவர், மாணவியை இரும்பு கம்பியால் தலையில் பலமாகத் தாக்கியுள்ளார். அதனால், நெற்றி மற்றும் தலையில் பலத்த காயமடைந்த மாணவி, சம்பவ இடத்திலேயே மயங்கி விழுந்துள்ளார். அதனைக் கண்டு அதிர்ச்சியடைந்த சக மாணவர்கள், காயமடைந்த மாணவியை மீட்டு உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர்.அங்கு முதற்கட்ட சிகிச்சை அளித்த பிறகு, மேல் சிகிச்சைக்காக மாணவி கோயம்புத்தூரில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். தற்போது, மாணவியின் உடல்நிலை சீராக உள்ளதாக ஐஐடி நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, தகவலறிந்து வந்த கசாபா காவல் நிலைய போலீசார், வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும், மாணவி மீது தாக்குதல் நடத்திய நபரை அடையாளம் காண,கல்லூரி வளாகத்தில் உள்ள சிசிடிவி காட்சிகளையும்ஆய்வுசெய்து வருவதாகவும், தாக்குதல் நடத்திய நபரை மாணவியால் அடையாளம்காணமுடியவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.துணைகாவல் கண்காணிப்பாளர் அஜித்குமார் கூறுகையில், "மாணவி மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தின் விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அடையாளம் தெரியாத ஒருவர், மாணவியின் பின்னால் வந்து தலையில் தாக்கியுள்ளார்.இது தொடர்பாக சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்து வருகிறோம். தாக்குதல் நடத்தியவர் ஐஐடி வளாகத்திற்கு வெளியே இருந்து வந்தவரா? அல்லது வேறு யார்? என்ற விசாரணை நடந்து வருகிறது.

ஏனென்றால், பிற மாநிலங்களை சேர்ந்த தொழிலாளர்கள் வளாகத்திற்கு அருகே வசிக்கின்றனர். இது தொடர்பாக, அவர்களிடமும் விசாரிக்கப்படும். ஐஐடி வளாகத்தில் இது மூன்றாவது சம்பவம் என்பதால், விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது" என தெரிவித்தார். இதற்கிடையே, மாணவி மீது தாக்குதல் நடத்திய சம்பவத்தை கண்டித்து, சக மாணவர்கள் கல்லூரி வளாகத்தில் இரவு நேரத்தில் போராட்டம் நடத்தினர். உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஐஐடி நிர்வாகம் உறுதியளித்ததை அடுத்து, போராட்டத்தை கைவிட்ட மாணவர்கள் கலைந்து சென்றனர்.

இது குறித்து மாணவர்கள் கூறுகையில், "சம்பவம் நடந்த சில மணி நேரத்திற்கு பிறகே போலீசார் வந்தனர். நாங்கள் போராட்டம் தொடங்கும் வரை எஃப்ஐஆர் பதிவு செய்யக் கூட போலீசார் தயாராக இல்லை" என குற்றஞ்சாட்டினர். "இது முதல் சம்பவம் இல்லை, மூன்றாவது சம்பவம். ஆனால், அதிகாரிகள் இந்த பிரச்சனையை பெரியதாக எடுத்துக் கொள்வதில்லை. மாணவியை தாக்கிய நபர், வளாகத்திற்கு வெளியே இருந்து தான் வந்தாரா? என தெளிவாக தெரியவில்லை. அப்படியே வெளிநபர் என்றால், அவர் எப்படி ஐஐடி வளாகத்திற்குள் நுழைந்தார்? நாட்டின் முக்கிய கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ளது. இந்த சம்பவம் மிகுந்த வேதனையளிக்கிறது" என தெரிவித்தனர்.

# இளைஞர் காங்கிரஸ் கட்சி தலைவர் உதய் பானு சிப் கைது; ராகுல்காந்தி கண்டனம்



புதுடெல்லி: ஏஐ உச்சி மாநாட்டில் ஆடையை களைந்து காங்கிரஸ் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்ட வழக்கில், இளைஞர் காங்கிரஸ் தலைவர் உதய் பானு சிப் கைது செய்யப்பட்டார். அவரை நான்கு நாள் போலீஸ்காவலில்விசாரிக்க டெல்லி நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

டெல்லியில் நடைபெற்றஏஐஉச்சி மாநாட்டுக்குள் கடந்த 20-ம் தேதி நுழைந்த இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகள் சிலர்,தாங்கள் அணிந்திருந்த டி சர்ட்டை களைந்து பிரதமர் மோடிக்கு எதிராகவும்,இந்திய –அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்துக்கு எதிராகவும் கோஷமிட்டனர். அவர்கள் அணிந்திருந்த டி சர்ட்களில், பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க அதிபர் ட்ரம்ப் புகைப்படங்கள், இந்திய – அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம், எப்ஸ்டீன் பைல் உள்ளிட்ட வாசகங்கள் இருந்தன.

இது தொடர்பாக போராட்டத்தில் ஈடுபட்ட 7 பேர் ஏற்கனவே கைது செய்யப்பட்ட நிலையில், போராட்டத்துக்கு பின்னணியில் இருந்து செயல்பட்டகுற்றச்சாட்டின் பேரில் இளைஞர் காங்கிரஸ் தலைவர் உதய் பானு சிப் இன்று கைது செய்யப்பட்டார்.

பாரதிய நியாய சன்ஹிதா சட்டத்தின் 196, 61(2), 121(1), 132, 195(1), 221, 223(ஏ), 190, 197, 3(5) ஆகிய பிரிவுகளின் கீழ் அவர் மீது வழக்குப் பதிந்த போலீசார், அவரை டெல்லியில் உள்ள பாட்டியாலா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். அவரை போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்க போலீசார் அனுமதி கோரிய நிலையில், 4 நாள் காவலில் எடுத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி அளித்து உத்தரவிட்டது.

உதய் பானு சிப் கைது செய்யப்பட்டதற்கு காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல்காந்தி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "அமைதியான முறையில் போராட்டம் நடத்துவது நமது வரலாற்றுப் பாரம்பரியம். அது நமது ரத்தத்தில் கலந்துள்ளது. இது ஒவ்வொரு இந்தியரின் ஜனநாயக உரிமை.

சமரசம் செய்து கொண்ட பிரதமருக்கு எதிராக தேச நலனுக்காக அச்சமின்றி குரல் எழுப்பிய இளைஞர் காங்கிரசின் சக உறுப்பினர்களை நினைத்த நான் பெருமைப்படுகிறேன்.

அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தத்தில் நாட்டின் நலன்கள் சமரசம் செய்யப்பட்டுள்ளன. இந்த ஒப்பந்தம் நமது விவசாயிகளுக்கும் ஜவுளி தொழிலுக்கும் தீங்கு விளைவிக்கும். மேலும் நமது தரவுகளை அமெரிக்காவிடம் ஒப்படைக்கும்.

இந்த உண்மையை தேசத்துக்கு எடுத்துக் கூறியதற்காக இளைஞர் காங்கிரஸ் தலைவர் உதய் பானு சிப் மற்றும் பிற இளைஞர் காங்கிரஸ் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டிருப்பது சர்வாதிகார போக்கு மற்றும் கோழைத்தனத்துக்கு எடுத்துக்காட்டு.

காங்கிரஸ் கட்சியும் நானும் நமது சக உறுப்பினர்களுக்கு ஆதரவாக உறுதியாக நிற்கிறோம். அச்சம் வேண்டாம். உண்மையும் அரசியலமைப்பும் எங்களுடன் உள்ளன" என ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.